1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

வரையறுத்த மொபிட்டல் (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') மற்றும் கம்பனியின் திரண்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதன் துணைநிலைக் கம்பனியில் (''தொகுதி'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கையின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும். இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

கம்பனி மற்றும் தொகுதியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனீ தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி மற்றும் தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்காக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது

அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி மற்றும் தொகுதி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.5.1 செலுத்த வேண்டியவை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
கட்டமைப்பு பகிர்வுகள், உள்நாட்டு இணைபபகள், வெளிப்புற நுழைவுகள், ரோமிங் மற்றும் பிற கணக்குகளில் 5 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவயாகவுள்ள ரூபா 78.17 மில்லியன் செலுத்த வேண்டிய நிலுவைகள் இனங்காணப்பட்டுள்ளது. அவை 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட்ட விலைப் பட்டியல்களை கொண்ட வழங்குநர்களிற்கு செலுத்த	**செலுத்த வேண்டிய ஏனைய:** செலுத்த வேண்டிய ஏனைய கணக்குகளின் கீழ் நிலுவையிலுள்ள விலைப் பட்டியல்கள் முக்கியமாக சர்ச்சைக்குரிய விலைப் பட்டியல்கள் மற்றும் பழைய காசோலைகளை குறிக்கின்றது. நாய்கள் மதிப்பாய்வு செய்து சரியான நடவடிக்கைளைப் பேசும் பணியில் ஈடுபட்டுள்ளோம் மேலும் விலைப் பட்டியல்கள் ஏற்கனவே	நிலுவையாக இருக்கின்ற செல்லுபடியாகும் தன்மை தாமதமாக பணம் செலுத்துவதற்கான காரணங்களைத் தீர்மானிக்க விரிவான மீளாய்வு மற்றும் முரண்பாடுகள் அல்லது ஏதாவது தகராறுகள் உடனடியாக தீர்வுகாணப்பட வேண்டும்.

வேண்டிய தொகைகளைக் குறிக்கின்றது.	செலுத்தப்ப்டுள்ளன. **உட்கட்டமைப்பு பகிர்வு / உள்நாட்டு /இணைப்பு வெளிப்புற நுழைவு செயல்பாடு-** அந்த மீதிகள் வழங்குநருடானான தகராறு காரணமாக பிரதானமாக செலுப்படாமல் இருந்தது.	

1.6 பொதுவான IT கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(i)	தகவல் பாதுகாப்பு கொள்கையின் 8.1 ஆம் பிரிவின் பிரகாரம் (பரிமாணம் 4.0) கொள்கையானது வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேுண்டும். எவ்வாறாயினும் கம்பனியானது ஆவணக் கட்டுப்பாட்டு பதிவேடுகளில் காட்டப்பட்டவாறு 2021 யூனில் காலாவதியான பரிமானத்தின் கீழ் செயற்பாட்டிலுள்ளது.	உடன்படுகின்றோம்	தகவல் பாதுகாப்ப கொள்கை ஆவணம் தொடர்ச்சியான பொருத்தம் மற்றும் வினைத்திறனை உறுதிப்படுத்துவதறகு வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு தரமுயர்த்தப்பட வேண்டும
(ii)	கம்பனியானது தகவல் பாதுகாப்பு கொள்கை பதிப்பு 4.0 இன் 16.6.3 ஆம் பிரிவிற்கமைய பயன்பாட்டு நிலை கடவுச்சொல் அமைப்புக்களை முறையாக வைததிருக்கவில்லை.	உடன்படுகின்றோம்	முகாமைத்துவம் தகவல் முறைமை போதிய கடவுச் சொல் அமைப்புக்களை கொண்டிருக்க வேண்டும்.
	Mcash இன் 21 கணக்குகளில் அடையாள நுழைவின் மேலாண்மை (IAM) அமைப்பின் 21 கணக்குகளிலும் இராஜினாமாச்செய்த ஊழிர்களின் பாவணையாளர் கணக்கை செயலிழக்கச் செய்த செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க தாமதங்கள் உள்ளன.	இராஜினாமா செய்த திகதிக்கும் திணக்கள தலைவர் ஒப்புல்களிற்கும் இடையில் பொருந்தாத தன்மை காரணமாக தேவையான அனைத்து ஒப்பதல்களும் கிடைக்கும் வரைமனித வளப் பரிவு பாவனையாளர் கணக்கு நீக்க கொரிக்கையை தாமதப்படுத்தலாம்.	இராஜினாம செய்த ஊழியரின் பாவணையாளர் கணக்ககள் தாமதமில்லாமல் செயலிழக்கச் செய்யப்பட வேண்டும்.

2. நிதி மிளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,877 மில்லியன் இலாமாக இருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா. 1,825 மில்லியனாகும் ஆகவே, நிதிசார் விளைவுகில் ரூபா 3,702 மில்லியன் தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் ரூபா 3,144 மில்லியன் தொகையான வாடிக்கையாளரிடமிருந்து வருமானம் அதிகரித்தமையே இந்த முன்னேற்றத்திற்கு காரணமாக உள்ளது.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

அதிகரிப்பு அல்லது வீழ்ச்சியின் சதவீதத்துடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிப்பட்டு மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவினங்களின் பகுப்பாய்வு பின்வருமாறு உள்ளன.

விபரங்கள்	2023 ரூபா மில்லியன்	2024 ரூபா மில்லியன	அதிகரிப்பு (வீழ்ச்சி) ரூபா மில்லியன	முரண் (%)	முரணிற்கான காரணம்
வருமானம்	42,636	45,780	3,144	7	வருமானம் செலவினம் மற்றும் அதிகரித்த செலுலார் செயற்பாடுகள் - உள்நாடு மற்றும் கான் செற், மொடம்ஸ், சிமிகாட் விற்பனை பொன்ற அதிகரித்தமை காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொது ரூபா 3,144 மில்லியனால் அதிகரித்திருந்தது.
வட்டி வருமானம்	390	276	(114)	(29)	வட்டி வருானம் வட்டி வீத குறைப்பு ரூபா நாணயமாற்று வீதங்களின் வீழ்ச்சி காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொது ரூபா 114 மில்லியனால் விழ்ச்சியடைந்தது.
நிதிக் கிரயம்	1,039	1,483	444	42	நிதிக் கிரயம் வட்டிச் செலவினம் மற்றும் ரூபா கடன்களிற்கான தொடர்புபட்ட சாட்டுதல்கள் அதிகரித்தமை காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொது ரூபா 444 மில்லியனால் அதிகரித்திருந்தது.

2.3 விகித பகுப்பாய்வு

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் தெகுதியின் கடந்த மூன்று அண்டுகளிற்கான சில முக்கியமான வீதங்கள் பின்வருமானு உள்ளன.

வீதம்	2024	2023	2022
நடைமுறை வீதம்	79.77%	71.66%	84.34%
விரைவு வீதம்	77.53%	69.80%	82.33%
ஒரு பங்கிற்கான வருவாய் (EPS)	ரூபா 0.11	(ரூபா 2.77)	(ரூபா 0.09)
மொத் இலாப வீதம்	66%	62%	66%
தேறிய இலாப வீதம்	0.30%	(8.56%)	(0.27%)

உரிமை மூலதனம் மீதான வருவாய்	1.05%	(27.65%)	(0.91%)
கடன் வீதம்	58%	56%	50%
சொத்த சுழற்சி வீதம்	0.55 தடவை	0.54 தடவை	0.60 தடவை
மொத்த சொத்துக்கான வருவாய்	0.17%	(4.66%)	(0.16%)
உரிமை மூலதன வீதம்	42%	44%	50%
கடன் உரிமை மூலதன வீதம்	3.66 தடவை	3.32 தடவை	2.86 தடவை

(i) 2023 ஆம் ஆணடுடடன் ஒப்பிடும் போது நடைமுறை வீதம் 71.66 சதவீதத்திலிருந்து 79.77 சதவீதமாக அதிகரித்திருந்ததுடன் விரைவு வீதம் 2024 ஆம் அண்டில் 69.80 இலிருந்து 77.53 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. இதன்படி 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2024 ஆம் ஆண்டில் தொகுதியினுடைய திரவத்தன்மை வீதத்தில் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டில் அந்த வீதங்கள் பதிவுசெய்யகப்பட்ட மட்டங்களை அடைந்திருக்கவில்லை.

(ii) கம்பனி மற்றும் அதன் துணைநிலைக் கம்பனிகளின் இலாபத்தன்மை 62 சதவீதத்திலிருந்து 66 சதவீதத்திற்கு மொத்த இலாபம் அதிகரித்தமைனால் அதிகரித்திருந்தது என அவதானிக்கப்பட்டது. .

(iii) கம்பனியானது 2023 ஆம் ஆண்டிர் குறிப்பிடத்தக்களவு தேறிய நட்டங்களை பதிவுசெய்திருந்தது, 2024 இல் தேறிய இலாப வீதம் 8.56 எதிர்மறையிலிருந்து 0.30 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. கம்பனி மற்றும் அதன் துணைநிலைக் கம்பனிகள் சாதகமான தேறிய இலாபத்திற்கு திரும்பியிருந்தது, ஆனால் உரிமை மூலதனம் சம்பந்தமான இலாபம் மிகவும் குறைவாக உள்ளமை அவதானிக்கப்பட்டது. இந்த வியாபாரம் அதன் பங்குதார்களிற்கு அரிதாகவே வருமானததை உருவாக்குகின்றது.

(iv) கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் பங்கொன்றிற்கான உழைப்புகள் 22023 இல் 2.77 எதிர்மறையிலிருந்து 2024 இல் 0.11 இற்கு அதிகரித்திருந்தது. பங்கொன்றிற்கான உழைப்புகள் எதிமறைத் தாக்கத்ததை 2023 இல் கணிசமானளவு நட்டங்கள் பங்கொன்றிற்கான உழைப்புகள் (EPS) மீது எதிமறைத் தாக்கத்தை உண்டாக்கியது என அவதானிக்கபபட்டது. ஆனால் 2024 இல் எதிர்மறைச் சுழற்சி அறவீட்டின் ஆரம்ப கட்டங்களை குறிக்கின்றதுடன் செயற்பாட்டு செயலாற்றல் முன்னேற்றப்பட்டிருந்தது.

(v) கடன் வீதம் 2022 இல் 50 சதவீதத்திலிருந்து 2024 இல் 58 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. கடன் நிதியளிப்புகளில் தங்கியிருத்தல் அதிகரிக்கின்றதுடன் அந்நதிய நிதி முதலீடுகள் வெளிப்பாட்டால் உரிமை மூலதனம் மீதான நம்பிக்கை குறைகின்றது.

(vi) சொத்து சுழற்சி விகிதம் 2022 இல் 0.60 தடவைகளிலிருந்து 2023 இல் 0.54 தடவைகளிற்கு குறைவடைந்தது 2024 இல் 0.55 தடவைகளிற்கு சிறியளவு முன்னேற்றததை பதிவுசெய்திருந்தது. வருமான உருவாகக்கத்திற்கு வினத்திறனான சொத்துப் பயனபாடு குறைவாக உள்ளதைக் குறிக்கின்றது.

(vii) உரிமை மூலதன வீதம் 2022 இல் 50 சதவீதத்திலிருந்து 2024 இல் 42 வதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது. பங்குதாரருடைய உரிமை மூலதனக் காலப்பகுதியில் நிதியளிக்கப்பட்ட சொத்துக்களின் வீதம் குறைவடைந்ததைக் குறிக்கின்றது.

(viii) உரிமை மூலதனத்திற்கான கடன் வீதம் 2022 இல் 2.86 தடவைகளிலிருந்து 2024 இல் 3.66 தடவைகளிற்கு அதிகரித்திருந்தது. தொகுதியின் செயற்பாட்டிற்பான உரிமை மூலதனம் தொடர்பான கடன் நிதியளிப்பு மீதான நம்பிக்ககை கருத்திற்கொள்வதைக் குறிக்கின்றது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
கம்பனியானது புதிய உடன் படிக்கை கைச்சாத்திடாமல் பல ஆண்டுகளிற்காக ஒன்லைனில் புகையிரத ரிக்கட் வாங்கும் பணளிகளிற்கு ரூபா 1,149 பில்லியன் பெறுமதியுடைய M-ரிக்கட் சேவை வழங்குவதை தொடர்ந்திருந்தது. முன்னைய உடன்படிக்கையின் 2.2.2 ஆம் பிரிவு புகையிரத திணைக்களத்திற்கு நாளாந்த சேகரிப்பு வாராந்த அனுப்புதல்களை வேண்டியிருந்த போதிலும் 2024 இல் அனுப்புதல்கள் 8 முதல் 36 நாட்கள் தாமதப்பட்டிருந்தமை ஒப்பந்த நிபந்னைகளுடன் இணங்காமையால் குறிக்கின்றது. .	முறையான உடன்படிக்கை 2023.12.31 இல் காலாவதியாகியிருந்தது என நாங்கள் ஒப்புக்கொண்டோம். பல சந்தர்ப்பங்களில் பின்பற்றப்பட்ட நடைமுறைப்படி கொடுப்பனவுகள் பொதுவாக ஒவ்வொரு 10 நாட்களிலும் செய்யப்பபட்டதுடன் வழமையாக மூன்று கொடுப்பனவுகளும் மாதாந்த சேகரிப்பு தீர்ப்பனவில் செய்யப்பட்டது.	உடனடபடிக்கை முறையாக செய்யப்பட வேண்டியதுடன் உடன்படிக்கை பிரகாரம் வாராந்த கால அட்டவணைக்குள் சேகரக்கப்பட்ட நிதிகளை அனுப்பட வேண்டும்.

3.2 செயற்பாட்டு திறமையீனங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
கம்பனியிற்கான ஆரம்ப நோக்கங்கள் வடிவமைப்பு, கட்டிடம், செயற்பாடு மற்றும் செலுலார் மொபைல் தொலைபேசி வலையமைப்பு உள்ளடங்கலாக தாபிக்கப்பட்டது. அதேபோல இறக்குமதி செய்தல் மற்றும் தொலைத் தொடர்பு உபகரணங்கள் கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள் என்பன கம்பனியின் மன்றத்தின் உறுப்புரைக்கமைய தாகிக்கப்பட்டது. அதேநேம் முகாமைத்துவம் அந்த நோக்கங்களை அடைதலை நோக்கி கம்பனி நெறிப்படுத்தப்பட்டது. மீளாய்வாண்டிற்கான வருடாந்த வியாபார திட்டம் ரூபா 48,621	2024 ஆரம்பத்தில் வருடாந்த வியாபாரத் திட்டம் 2023 திசெம்பரில் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் கம்பனியினுடை வருமானம் மெதுவான வீழ்ச்சியை காட்டியது. சபையானது 2021 ஆம் ஆண்டில் இறுதியாக அடைய வெண்டிய விருமான இலக்குகளை விஞ்சும் நோக்கத்துடன் அதிக இலக்கு நிதிகளிற்காக வலியுறுத்தியது. முகாமைத்துவத்தின் பொறுப்பு இலாபத்தை அதிகரிப்பதுடன இலாபத்தன்மை இலக்குடன் திருத்தப்பட்ட திட்டத்தை சமர்ப்பிப்பதாகும். 2024 ஆம்	அதேபோல எதிர்காலத்தில் வருமான எதிர்வுகூறலில் சரியான தன்மையை முன்னேற்றவும் செயலாற்றலில் நேர்மறையான மாற்றத்தை உயர்த்தவும் தேவைப்பட்டது.

மில்லியன் வருமானத்ங்கள் பாதிடப்பட்டு தொடருகின்றது எவ்வாறாயினும் செயலாற்றல் அறிக்கை உள்ளபடியான வருமானம் ரூபா 45,524 மில்லியன் என் குறிப்பிடுகின்றது. இதன்படி எதிர்பார்க்கப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையிலான விதியாசம் 6 சதவீதம் குறைவடைந்தமை அவதானிக்கப்பட்டது.	ஆண்டின் பொது குறிப்பிடத்தக்க சந்தை அபிவிருத்தி இரண்டு போட்டிக் கமபனியும் அவர்களிற்கிடையிலான போட்டி மற்றும் சந்தை கெள்வியை வலுப்படுத்துவதற்கு அவற்றிற்கு இடையில் இருந்தது. இந்த முகாமையாளர் இந்த இணைப்பு ஏனைய போட்டியாளர்களுடைய பிரச்சனை மற்றும் சீர்குலைக்கும் கட்டண உபாயங்களுடன் சேர்ந்து சந்தை போட்டியை துரிதப்படுத்தியதுன் பொபைல் வருமானம் வளர்ச்சிக்கு சவால்களை ஏற்படுத்தியது. இந்த வெளிப்புற பிரச்சனைகள் காரணமாக அழுத்தம் இருந்த பொதிலும் மொப்பிட்டல் அதன் இரண்டு ஆண்டு வருமான வீழ்ச்சியை வெற்றிகரமாக மாற்றியமைத்தது. 2024 ஆம் ஆண்டில் இலபத்திற்கு திரும்பியது செயலாற்றலை நேர்மறையாக மாற்றியமைக்கிறதை குறிக்கின்றது.	

3.3 கொள்வனவு முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(i)	கம்பனியானது கொள்வனவு கொள்கையை பின்பற்றுவதற்காக சபையின் அனுமதி பெற்றிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும் கமபனியானது 2022 ஆகஸ்ட் மாதத்தில் கம்பனியின் சிரேஸ்ட முகாமைதத்துவ குழு அனுமதித்த கொள்வனவு கொள்கையின் 1.3 ஆம் பிரிவிற்கு முரணாக கொள்வனவு திட்டம் மற்றும் கொள்வனவு கலன்டர் 2024 ஆம் அண்டிற்காக தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. இதன்விளைவால் கொள்வனவு 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நியாயமான வழியில் நடாத்தப்படுவதற்கோ அல்லது செய்யப்பட்ட முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கோ சாத்தியமிருக்கவில்லை.	கொள்வனவு கொள்கை வழியில் கொள்வனவு பிரிவு கொள்வனவு திட்டம் மற்றும் கொள்வனவு கலண்டர் தயாரித்தது. 2024 இல் இறுதியாக்கப்பட்டதுடன் 2024 ஏப்ரல் 10 இல் பங்குதாரருடன் பகர்ந்தது. திட்டம் விரிவான மீளாய்வு அடிப்படையில் வருடாந்த கொள்வனவு முன்னுரிமைக்கு வெளியே இருந்தது.	கொள்வனவு கொள்கையின் பிரகாரம் கொள்வனவு திட்டம் மற்றும் கொள்வனவு கலண்டர் தயாரிக்கப்பட வேண்டியதுடன் கொள்வனவு கொள்ழக மற்றும் கொள்வனவு கலண்டர் பிரகாரம் சபையால் அனுமதிபக்கப்பட வேண்டும்.
(ii)	2022 ஆகஸ்ட் மாதத்தில் கம்பனியின் சிரேஸ்ட முகாமைத்துவ குழு அனுமதித்த	தற்போது வருடாந்த விற்பனையாளர் பதிவு நடைமுறை படுத்தப்படவில்லை.	கம்பனியின் கொள்வனவு திட்டதின் பிரகாரம் நாளது

	கொள்வனவு கொள்கையின் 4.4.4 ஆம் பிரிவின் விலகல் கம்பனி பதிவு செய்த விற்பனையாளர் பட்டியல் அவ்வப்போது புதுப்பிக்கப்படாத நிலையில் சில உள்ளீடுகள் 2016 ஆம் ஆண்டுவரை உள்ளன. வழக்கமாக புதுப்பிப்பு இல்லாமல் புதிய வழங்குநருக்கு குறைந்த வாய்ப்புக்களை வழங்கியது. மேலும், தொடர்ச்சியான மதிப்பாய்வு மற்றும் உள்ளீட்டு மூலம் சம வாய்ப்பை வலியுறுத்தும் கொள்வனவு கொள்கையின் 1.6 ஆம் உட்பிரிவுடன் இணங்கியிருக்கவில்லை.	புதிய விற்பனையாளர் தேவைப்பட்டவாறு எந்நேரமும் இணையதளம் ஊடாக அல்லது வகுதி ஊடாக பதிய முடியும். 2024 இல் 64 புதிய விற்பனையாளர் கணக்காய்வு பரிந்துரைகள் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டிருந்தது. வருடாந்த மீள்பதிவு நடைமுறை 2026 சனவரியில் தொடங்கப்படும்.	வரையாக்கிய பதிவு செய்த வழங்குநர்களை பேணப்பட வெண்டும்.
(iii)	2024 இல் கம்பனியானது ஆரம்பத்தில் விற்பனைக்கான ரூபா 14 மில்லியன் பொறுமதியாக இருந்த காணி ரோவர், எரிபொருள் பவுசர் மற்றும் மூன்று பெட்டிகள் கைதவிர்க்கப்பட்டது. எவ்வாறாயினும், இந்த மதிப்பீட்டிற்கு குறைவாக கேள்வி பெறப்பட்டமையால் கேள்வி இரத்து செய்யப்பட்டிருந்தது. பின்னர் புதிய கேள்விகோரல் நடைமுறை தொடங்கப்பட்டது. இருந்த போதிலும் புதிய கோள்வி கோராமல், ரூபா 9.1 மில்லியன் உயர்ந்த கேள்வி பெறுமதியில் விற்பனை செய்யப்பட்டதால் கம்பனிக்காக ரூபா, ரூபா 4.9 மில்லியன் நட்டத்தில் விளைந்தது.	கம்பனியில் தாபிக்கப்பட்ட நடைமுறைப்பிரகாரம் எரிபொருள் பவுசர் மற்றும் கென்டைனர் பெட்டி போக்குவரத்து கேள்வி கோரல் நடைமுறையை பின்தொடர்ந்து உயர்த்த கேள்விக்கு வழங்கப்பட்டது. மதிப்பிட்டுாளரால் சந்தை மதிப்பாய்வு அறிக்கை குறிப்பு நடைமுறைக்காக பயன்பாட்டாளர் பிரிவால் எடுக்க்பபட்டிருந்தது. .	மதிப்பிடப்பட்ட பெறுமதி அடிப்படையில் மேற்குறித்த கேள்வி விங்பனை பெறுமதியை வைத்திருக்க வேண்டும்.
iv	கம்பனியானது வெலிகடை கூட்டு அலுவலகத்தில் 25 kw சூரிய சக்தி பனல் முறைமை, மின்சார வாகனம் (EV) சாட்டுதல் பிரிவு மற்றும் மொட்டை மாடியில் எரிபொருள் தாங்கிகள் பொருத்துவதற்காக கொள்வனவிற்காக ரூபா 12 மில்லியன் கிரயம் மதிப்பிடப்பட்டது. எவ்வாறாயினும், தொழில்நுட்ப மதிப்பாய்வு பூர்த்தியாக்கலை தொடர்ந்து EV சாட்டுதல் பிரிவு முறையான அனுமதி பெறாமல் கொள்வனவு நொக்கெல்லையிலிருந்து விலகியிருந்தது. இந்த விலகுதல் பிரச்சனை சூரிய சக்தி பனல்	ஆரம்ப கிரய மதிப்பீடு இது முதலாவது தடவையாக தாபன அமைப்பிற்குள் கருத்திற் கொள்ளப்படுகின்ற விலை மூலம் பயன்பாட்டாளர் பிரிவு மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. நாங்கள் அதே செயற்திட்டங்களாக கொள்வனவு நடைமுறை நடாத்தப்பட்டிருந்தது. எனவே, உள்ளபடியாக வழங்கப்பட்ட விலை இந்த செயற்திட்டத்தின் தன்மைக்காக ஆரம்ப மதிப்பிடப்பட்ட கிரயத்தை தவிர உயர்வாக இருக்க முடியும்.	கம்பனியானது எதிர்காலத்தில் அதிக விரிவான கிரய மதிப்பீட்டை பின்பற்றப்பட வேண்டும்.

முறைமை மற்றும் மொட்டை மாடியில் பொருத்துதல் ரூபா 14.21 மில்லியன் கிரயத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கம்பனினாது தேவையான அனுமதி பெறாமல் ஆரம்ப மதிப்பிடப்பட்ட கிரயத்தினை விட ரூபா 2.21 மில்லியன் மிகைக் கிரயத்தில் மேற்கொள்வதற்கு விளைந்தது.

3.4 வாகன அணியினி முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நடமாடும் சமிஞ்சை பரீட்சித்தலிற்காக ரூபா 16.68 மில்லியன் பெறுமதிக்கு விசேட கருவிகள் பொருத்திய வாகனங்கள் குழு உபகரண பாதுகாப்பு ஆபத்தளிக்கின்ற மற்றும் தவறாக பயன்படுத்தலாக வாகனமாக சில சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்டது. மேலும் உபகரணங்களின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்ட பொறுப்பான பிரிவு இல்லாத சேதம் அல்லது நட்டங்கள் ஏற்பட்டால் பொறுப்பு கூறல் கவலைகளை எழுப்புகின்றது.	வாகனங்கள் ஆபத்தான சந்தர்ப்பங்களில் மாத்திரமே குழு வாகனங்களை பயன்படுத்துகின்றோம். ஆபத்தை குறைப்பதற்கு போக்குவரத்துப் பிரிவு குறிப்புரை வழங்கப்படுவதுடன் உரிய பயன்பாட்டாளர் பிரிவுக்கு வாகனத்தின் உரியையாண்மையை மாற்றும்.	தெளிவான கணக்களிப்பை தாபிப்பதற்கு வாகனங்கள் மற்றும் அதன் உபகரணங்களிற்காக குறித்த பிரிவிற்கு முறையாக பொறுப்புக்களை ஒதுக்கப்பட வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(i)	கம்பனியளானது சுமூகமான மனித வளச் செயற்பாடுகளிற்கு அவசியமான அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு கொள்கையை கொண்டிருக்கவில்லை.	பொது நடைமுறைகள் மற்றும் செயற்பாடுகளில் சுட்டிக்காட்டப்பட்ட முறைவான வழிகாட்டலாக வரைவு விரிவான ஆடசேர்ப்புத் திடட்ம் மற்றும் பதவியுயர்வு கொள்கை தயாரத்தல் தொங்கியிருந்தது. அந்த கொள்கைகள் உளடளக கட்டபபாட்டு குழுவால் மீளய்வு செய்யப்படுகின்றன. மற்றும் 2026 சனவரி 31 அளவில் முகாமைத்துவ அனுமதிக்காக முன்வைக்கப்படும்.	சுமூகமான மனித வளச் செயற்பாடுகளிற்காக ஒவ்வொரு பதவிக்குமான ஓய்வுபெறல் மற்றும் பதவியுயர்வு கொள்கை தயாரிக்கப்பட்டு அனுமதிக்பபட வேண்டும்.
(ii)	2022 இலிருந்து 2024 வரையான ஊழியர் சுழற்சி 14 சதவீதத்திற்கும் 16 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் சுழற்சி வீதம் இருந்ததென வெளிப்பட்டது. மேலும் 2024 இல் ஊழியர் வெளியேறுகை குறைந்தது மூன்று ஆண்டுகளிற்காக கம்பனியை விட்டு	முகாமைத்தவம் கவம் செலுத்துப்படுகின்ற பகுதிகளாக இதகை கருதுகின்றதுடன் ஏற்கனவே கவனம் செலுத்துவதற்கு பல அளவீடுகளை தொடங்கியிருந்தது. இந்த விடயத்த வெளிப்படுத்துவதற்கு சம்பள மீளாய்வு நடாத்துவதற்கு முகாமைத்துவத்தின் பரிந்துரை மற்றும் பிரதம செயற்பாட்டு	கம்பனியின் சுமூகமான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு உத்தியோகத்தர் சுழற்சியை குறைப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

	வெளியேறியோர் அளவு குறைவடைந்திருந்தது.	உத்தியோகத்தர் மற்றும் கம்பனியன் நிதிச் செயலாற்றலிற்கு உட்பட்டு நிலவுகின்ற தொழில் நியமங்களின் வழியில் உள்ளக சம்பள கட்டமைப்பை சீரமைக்கும் நொக்குடன் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் பணிப்பாளர் சபை என்பவற்றின் அனுமதித்தனர்.	
(iii)	நிறுவனரீதியான ஆளணியை ஒதுக்குகின்ற உத்தியோகத்தர் தேவை, தயாரித்தல் கால ரீதியான நாளதுவரையாககல் என்பன முக்கியமாக உள்ள போதிலும், கணக்காய்வு மீளாய்விற்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி இன்மை ஆபத்தை விளவிக்கும். இந்த இடைவெளி பொருத்தமான ஊழியர்களை சரியான நேரத்தில் ஆட்சேர்ப்பதை தடுக்கலாம் இது நிறுவனத்தின் உபாய நோக்கங்கள் நிறைவேற்றம் திறனைப் பாதிக்கும்.	முகாமைத்துவத்தின் ஒத்துழைப்புடன் காலத்திற்க காலம் செயற்பாட்ட தேவைகளின் அடிப்படையில் ஊழியர் தேவைகளை மதிப்பிட்டு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். அதேநேரம் தற்போது பாவணையாளர் பிரிவில் முக்கிய பணிகளிறகாக தகுதியான வர்த்தக நியாயங்களை சமர்ப்பித்தால் மாத்திரமே நேரடி மாற்றீட்டு ஒப்புதல்களுடன் இலகுவாக்கப்படுகின்றன.	சபை அனுமதித்த ஆளணியை கொடிருக்க வேண்டியதுடன் இதன்படி ஆட்சேர்ப்புகள் செய்யப்பட வேண்டும்.
(iv)	கம்பனியானது பிரதான முகாததுவ பதவிகள் மற்றும் செயற்பாட் பதவிகளிற்கான முறையான திட்டமிடல் கட்டமைப்பு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. பொறிமுறை இன்மை, குறிப்பாக எதிர்பாராத ஓய்வு, இராஜினாமாக்கள் அல்லது முக்கிய பதவிகளில் ஊழியர்களை நீணடகாலம் இலலாத சூழிநிலை போன்றன நிறுவன தொடர்ச்சிக்கு கணிசமான ஆபத்தை விளைவிக்கின்றது.	திட்மிடல் நிகழ்ச்சித் திட்டத்தை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இது 2026 ஆம் ஆண்டில் இரண்டாம் காலாண்டிற்குள் பூர்த்தியக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இது தொடர்ச்சியான செயற்பாடாக நிறுவனக் கட்டமைப்பில் முக்கிய பணிகளை அடையாளம் காண்பது சாத்தியமான வாரிசுகளை மதிப்பிடுவது மற்றும் நிறுவன தொடர்ச்சியை உறுதி செய்வதற்கும் முன்கூட்டியே எதிர்பார்க்ப்படும் இராஜினாமாக்கள், ஓய்வுகள் அல்லது அல்லது முக்கிய பதவிகளில் ஊழியர்களை நீணடகாலம் இல்லாத சூழிநிலை போன்றன சுமூகமான மாற்றங்களை உறுதி செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்ட மேம்பாட்டு திடடஙகனை செயறபடுத்துவதற்கும் முக்கியத்துவம் உள்ளது. .	கம்பனியின் வெற்றியிளித்தல் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.